**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**<u>10.08.2026</u>**

OS. No. 25/2008

பக்கம் – 8

DW2 – ரத்தினவேலு (D9)

**<u>வாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி 6 மற்றும் 7ஆம் பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 6 மற்றும் 7ம் பிரதிவாதிகள் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க உள்ளார்களா என்றால் இல்லை வரமாட்டார்கள். 6 மற்றும் 7ம் பிரதிவாதிகள் சார்பிலும் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதாக எனது பிரமாண பத்திரத்தில் வாசகம் இல்லை என்றால் சரிதான். 6 மற்றும் 7ம் பிரதிவாதிகள்தான் சொத்தினை கிரையம் பெற்றவர்கள் என்பதால் சுவாதீனத்தை பற்றியும் கிரையம் பெற்றதை பற்றியும் 6 மற்றும் 7ம் பிரதிவாதிகள்தான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பிரமான வாக்குமூலத்தில் 6ம் பத்தியில் "நான் கூறுவது யாதெனில் ராமசாமி முதலியாரின் சொந்தமான சொத்துக்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையின் 10ம் பத்தியில் "தாவா சொத்துக்கள் ராமசாமி முதலியாருக்கு பாத்தியப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே, கூட்டு பங்குதாரரே மூதாதையர் சொத்துக்கள் இல்லை என்று சொல்லும் நிலையில் அந்த தாவா சொத்தை கிரையம் பெற்ற நான் வாதிகளின் மூதாதையர் சொத்து தவறு என்றால் சரியல்ல. நான் சொல்லும் அதே பத்திரத்தில்தான் ராமசாமியின் 1950ஆம் ஆண்டு திருமணமான பெண்களுக்கும் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அதில் அவர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. நான் தாவா சொத்திற்கான உரிய பிரதிபலன் கொடுக்காமல் 2ம் பிரதிவாதி சத்யமூர்த்தியுடன் கூட்டு சேர்ந்துகொண்டு தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தின் நகல் என் வசம் உள்ளது என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். அதில் எவ்வளவு தொகை போடப்பட்டுள்ளது என்றால் பார்த்தால்தான் சொல்ல முடியும். என்னிடம் கிரைய ஒப்பந்தம் இல்லை என்றும் அவ்வாறு இருந்திருந்தால் வழக்கு தாக்கல் செய்யும்போதே நான் தாக்கல் செய்திருப்பேன் என்றும் இல்லாததால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு அதிகம் என்றும் சொற்ப தொகைக்கு 2ம் பிரதிவாதி சத்யமூர்த்தியுடன் கூட்டு சேர்ந்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் தவறு. நான் பெற்ற கிரையம் நல்லெண்ணத்தின்

அடிப்டையில் இல்லை என்றால் சரியல்ல. நான் உண்மையில் நல்லெண்ணத்தில் கிரையம் பெற்றிருந்தால் நான் நல்லெண்ண கிரையதாரர் என்று எனது எதிருரையில் குறிப்பிட்ருப்பேன் என்றும் அவ்வாறு இல்லை என்பதால்தான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

Sd/– J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.